பக்கங்கள் 19+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 11 வியாழக்கிழமை 24.04.2025 | அதிர்வு 264

## துண்டுப்பிரசுரங்களுடன் பெண் வேட்பாளர் கைது!

(எஸ்.ஜினோதன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர் ஒருவர் தேர்தல் துண்டுப்பிரசுரங்களுடன் புத்தளம் பொலிஸாரால் நேற்று 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# டக்ளஸ் உட்பட அனைவர் மீதும் விசாரணைகள்



## வவுனியாவில் அமைச்சர் பிமல் உறுதி; சுமந்திரனையும் போட்டுத் தாக்கினார்

(கி.வசந்தன்)

“மன்னாரில் இருந்து புத்தளத்துக்குச் சொப்பின் பையுடன் வந்தவர்கள் இன்று பத்து கப்பல்களை வாங்கும் நிலையை அடைந்துள்ளனர். டக்ளஸ் எல்லா அரசிலும் அமைச்சராக இருந்தார். நாங்கள் யாரையும் பாரபட்சம் பாக்கமாட்டோம். பொதுமக்களின் பணத்தை ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம்.”

- இவ்வாறு சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் வவுனியா மாநகர சபைக்கான தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களைஆதரித்துநேற்று புதன்கிழமை இரவு நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு 03▶

# தபால் மூல வாக்களிப்பு இன்று ஆரம்பம்





(கி.வசந்தன், எஸ்.ஜினோதன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் இன்று ஆரம்பமாகியுள்ளது.

தபால் மூலம் வாக்களிப்பதற்காக இம்மாதம் 24, 25, 28, 29 ஆகிய திகதிகளைத் தேர்தல் ஆணைக்குழு ஒதுக்கியுள்ளது.

அதற்கமைய இன்று காலை 8.30 மணிக்குத் தபால் மூல வாக்களிப்புச் செயற்பாடுகள் சுமுகமாக ஆரம்பமாகின.

தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம், பொலிஸ் திணைக்களம், மாவட்ட செயலகங்கள் உள்ளிட்ட 02▶

# ஏப்ரல் 26 இலங்கையில் துக்க தினம்



புனித பாப்பரசர் பிரான்சிஸின் மறைவையொட்டி அவரின் இறுதிக் கிரியைகள் இடம்பெறும் தினமான எதிர்வரும் 26ஆம் திகதியை இலங்கையில் தேசிய துக்க தினமாக அரசு அறிவித்துள்ளது.

எனவே, எதிர்வரும் 26 ஆம் திகதி சகல அரச நிறுவனங்களும் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடுமாறும் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.



# பொலிஸார் விசேட சுற்றிவளைப்பு வேட்டை! போதைப்பொருள்களுடன் 361 பேர் கைது!!

நாடளாவிய ரீதியில் நேற்று புதன்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது போதைப்பொருட்களுடன் 361 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப் பொருளுடன் 111 பேரும், ஐஸ் போதைப் பொருளுடன் 167 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 82 பேரும், சட்டவிரோத சிகரெட்டுகளுடன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை நாடு முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். மாவட்டத்தில் இதுவரை 52 தேர்தல் விதிமுறை மீறல்கள்



**(எஸ்.நிதர்ஷன்)**

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று வரை 52 தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவப் பிரிவினால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**துண்டுப்பிரசுரங்களுடன்...**

புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் வேட்பாளர் புத்தளம் – தில்லடி பிரதேசத்தில் வசிக்கும் 61 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சட்ட விதிமுறைகளை மீறி தேர்தல் துண்டுப்பிரசுரங்களுடன் மக்களின் வீடுகளுக்குச் சென்று பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டபோதே இந்தப் பெண் கைது செய்யப்பட்டார் எனவும், அவரிடமிருந்து 86 தேர்தல் துண்டுப்பிரசுரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**தபால் மூல...**

அரச நிறுவனங்களில் தபால் மூல வாக்களிப்புச் செயற்பாடுகள் இன்று ஆரம்பமாகின.

இந்த வருடம் 6 இலட்சத்து 48 ஆயிரத்து 495 விண்ணப்பதாரர்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**டக்ளஸ் உட்பட...**

உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

### சட்டம் சாதாரண மக்களுக்கே

நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து எமது பிரச்சினைகுத் தீர்வு காண்பதே உண்மையான அரசியல். உங்களுக்குத் தெரியும் இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் பெரிய மனிதர்களுக்கு இருக்கவில்லை. அது சாதாரண மக்களுக்காகவே இருந்தது. ஆனால், இன்று அதனை உங்களின் வாக்குகளின் மூலம் மாற்றியுள்ளோம். இன்று மிகப் பெரிய இலஞ்ச, ஊழலில் ஈடுபட்ட முதலைகளைப் பிடித்து அவர்களுக்கு தண்டனை கொடுக்கும் வேலை நடக்கின்றது. முன்னொரு காலத்தில் அமைச்சர்களைக் கண்டு பொலிஸார் ஓடி ஒளிந்தார்கள். இன்று பொலிஸுக்குப் பயந்து அமைச்சர்கள் ஓடி ஒளியும் நிலையை நாங்கள் உருவாக்கியிருக்கின்றோம்.

### ராஜபக்ஷவே பெரிய முதலை

கிளிநொச்சியில் ஒருவர் கேட்டார் வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற கள்வர்களை நீங்கள் பிடிக்கமாட்டீர்களா என்று. இங்கே இருக்கின்ற கள்வர்களையும் நாங்கள் பிடிப்போம். இங்கும் மன்னாரில் இருந்து புத்தளத்துக்குச் சொப்பின் பையுடன் வந்தவர்கள் இருக்கின்றனர். இப்போது அவர்களது சொத்துக்கள் மூலம் பத்து கப்பல்களை வாங்க முடியும். டக்ளஸ் எல்லா அரசிலும் அமைச்சராக இருந்தார். நாங்கள் யாரையும் பாரபட்சம் பார்க்க மாட்டோம். பொது மக்களின் பணத்தை ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம். பெரிய முதலைகள் கொழும்பிலேதான் இருக்கிறார்கள். ராஜபக்ஷ மிகப் பெரிய முதலை. நாமல், யோஷித ஆகியோருக்குப் பொதுமக்களின் பணத்தைச் சூறையாடியமைக்காக வழக்குகள் பதிவு செய்துள்ளோம். எனவே, உங்கள் வாக்குகள் மூலம் நாட்டின் சட்டமும் ஒழுங்கும் நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றது. நாட்டின் பாதாளக் குழுக்களை உருவாக்கியவர்கள் ராஜபக்ஷக்களும், விக்கிரமசிங்கக்களும், பிரேமதாஷக்களுமே.

### பெண்கள் பொட்டு வைத்தாலும் சோதனை

முன்பு சோதனைச் சாவடிகளில் பெண்கள் பொட்டு வைத்துச் சென்றால் இருமுறை சோதனை செய்வார்கள். பொட்டு இல்லாவிடில் ஒரு தரம் சோதனை செய்வார்கள். முஸ்லிம் மக்கள் என்றால் மூன்று தரம் சோதனை செய்வார்கள். அதை மாற்றும் செயற்பாட்டை நாம் முன்னெடுத்துள்ளோம். நாங்கள் இந்த அரசைப் பொறுப்பெடுத்து 5 மாதங்களே ஆகின்றன. முச்சக்கரவண்டியை வேகமாகத் திருப்பலாம். பேருந்தையும், கப்பலையும் வேகமாகத் திருப்புவது கடினமே. பிழையான வழியில் சென்ற தேசத்தையே திருப்ப நாம் முற்பட்டுள்ளோம். உங்களுக்கும் எனக்கும் கிடைத்தது சொர்க்கமான பூமி அல்ல. வங்குரோத்தான ஒரு நாடு.

ரணில் இந்த நாட்டை ஆண்ட போது டொலரின் பெறுமதி காலை ஒரு விலையிலும், மாலை ஒரு விலையிலும் இருந்தது. இன்று அதில் ஒரு ஸ்திரத்தன்மை காணப்படுகின்றது. உங்கள் பொருளாதார பிரச்சினைகள் தீர்வதற்குக் கொஞ்சக் காலம் எடுக்கும்.

### இனி கனடா வேண்டாம்

காணாமல் ஆக்கப்பட் ஒரு மகன் மீண்டும் கிடைத்தது போல் வடக்கு மாகாணம் எமக்குக் கிடைத்துள்ளது. அதனை நாங்கள் அன்போடு பாதுகாப்போம். வடக்கை வளப்படுத்த எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம். பலாலி விமான நிலையத்தை விருத்தி செய்வோம். அங்கு கொழும்பில் இருந்து ஆட்களை வேலைக்கு அமர்த்த நாங்கள் எதிர்பார்க்கவில்லை. கைத்தொழில் பேட்டைகளை உருவாக்குவோம். காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய பகுதிகளில் அவை அமையவுள்ளன. அதன் பின்னர் உங்களது உறவுகளுக்குச் சொல்லுங்கள் கனடா சென்று பனியிலே கஷ்டப்படும் நிலை மாறும் என்று.

### 100 ஏக்கர் காணிகள் விரைவில் விடுவிப்பு

இந்தப் பிரதேசத்தில் இருக்கும் காணிகளை யுத்த தேவைகளுக்காகவும் அதற்குப் பிறகும் இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். பொதுமக்களின் காணிகளை அவர்களுக்கே வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். வடக்கில் கிட்டத்தட்ட 25 பகுதிகளில் 100 ஏக்கருக்கும் அதிகமான நிலங்களை விரைவில் விடுவிப்பதற்கு அடையாளம் கண்டுள்ளோம். சிலர் நினைக்கின்றார்கள் தாங்கள் பிடித்த நிலங்களை அப்படியே வைத்திருக்க வேண்டும் என்று. ஏனெனில் மீண்டும் ஒரு யுத்தம் வரலாம். வந்தால் தங்களுக்குச் சுலபம் என நினைக்கின்றார்கள். மீண்டும் ஒரு யுத்தம் வருமா என்று உங்களிடம் கேட்கின்றேன். இனிமேல் யுத்தம் வராது. நாங்கள் தேசிய சமாதானத்தை நிலை நிறுத்தும் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவோம்.

### வடக்கிலும் இனவாதிகள்

வடக்கில் நிலங்களை விடுவிக்கும் போது தெற்கில் உள்ள இனவாதிகளுக்குக் கஷ்டமாக இருக்கும். அதேபோல் வடக்கிலும் இனவாதிகள் உள்ளனர். நான்குமாதங்களில்ஒருஅப்பக்கடையைப் போடுவதே கடினம். நாங்கள் ஆனையிறவு உப்பு உற்பத்தியை ஆரம்பித்துள்ளோம். அதனைத் தொடங்கிய பின்னர் சுமந்திரனுக்கு அது பிரச்சினையாக உள்ளது. உப்பு பைக்கற்றில் பெயர் பிழையாம். உப்பிலே நீங்கள் பார்ப்பது பெயரையா, சுவையையா?. இவ்வாறான சின்ன விடயங்களுக்காக இனவாதத்தைத் தூண்டும் ராஜபக்ஷக்கள் போன்ற சகோதரர்கள் வடக்கிலும் உள்ளனர்.

### வடக்கின் பெரிய தமிழ்க் கட்சி நாங்களே

தமிழ்க் கட்சிக்கு வாக்களிக்குமாறு இன்று சொல்கின்றார்கள். இலங்கையில் உள்ள மிகப் பெரிய தமிழ்க் கட்சி தேசிய மக்கள் சக்தியே. வன்னி, யாழ்ப்பாணம், நுவரெலியா, பதுளை போன்ற மாவட்டங்களில் உள்ள மிகப்பெரிய தமிழ்க் கட்சி தேசிய மக்கள் சக்தியே. சுமந்திரனுக்கான வாக்குகள் யாழ்ப்பாணத்தில் இம்முறை கிடைக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் தமிரசுக் கட்சியில் ஒருவர் கூட நாடாளுமன்றத்தில் இல்லை. சிறீதரன் கிளிநொச்சி வாக்குகளினால் தான் நாடாளுமன்றத்துக்கு வந்தார். இலங்கையில் உள்ள பெரிய முஸ்லிம் கட்சியும் தேசிய மக்கள் சக்தியே. பெரிய சிங்களக் கட்சியும் அதுவே.

### கம்மன்பில ராஜபக்ஷவின் கோளையாள்

தெற்கின் கம்மன்பில போன்றோர் வடக்கிலும் உள்ளனர். அரசியல் அநாதைகளாக உருவாகியிருக்கின்றார்கள். அவர்கள் இனவாதத்தை விதைக்கின்றார்கள். ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தில் சந்தேகத்தின் பெயரில்தான் பிள்ளையானைக் கைது செய்திருக்கின்றோம். அவரைக் கைது செய்தவுடன் அவருடன் தொலைபேசி அழைப்பில் கதைக்க வேண்டும் என முதலாவதாக முற்பட்டவர் யார் என்று தெரியுமா? பிள்ளையானின் மனைவி அல்ல. ரணில் விக்கிரமசிங்க. அவர்கள் இருவரும் நண்பர்களா? ஒருபோதும் இல்லை. கம்மன்பில பிள்ளையானின் சட்டத்தரணியாக ஏன் மாறுகின்றார். அவர் ராஜபக்ஷக்களின் கோளையாள்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டறிய விசாரணை நடத்தப்படும் போது ராஜபக்ஷக்கள், ரணில், சஜித் அனைவரும் குழப்பம் அடைந்துள்ளனர். நாட்டை வளப்படுத்த முற்படும் போது கள்வர்கள் குழப்பமடைந்துள்ளனர்.

### சுமந்திரனை விட யாழ்ப்பாணத்துக்கு பல முறை சென்றுள்ளேன்

ஒற்றுமையை ஏற்படுத்தும்போது இனவாதிகள் குழப்பம் அடைந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் எமது வேட்பாளர்கள் தொடர்பாக தேவையில்லாத விடயங்களைச் சொல்லி வருகின்றனர். இப்படியான பொய்களை மக்கள் நம்ப வேண்டாம். கிராமத்திலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியை அமைப்போம். எனவே, மக்கள் அர்ப்பணிப்புள்ள உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டும். தமிழரசுக் கட்சிக்கு ஒரு தொன் காசு வழங்கினாலும் வேலை செய்ய மாட்டார்கள். வடக்கு மாகாண சபையில் நடந்தது உங்களுக்குத் தெரியும். மஹிந்த தெற்கிலே களவெடுத்தார். தேர்தலில் கூறுவார் சிங்கள ஜாதி சிங்கள ஜாதி என்று. சிங்கள மக்கள் வாக்களித்தார்கள். அவர் திறைசேரியை பூஜ்ஜியமாக்கினார். வடக்கிலும் அப்பிடிச் சிலர் உள்ளனர். அவர்கள் அரசியல் சோம்பேறிகள். சும்மா இருப்பார்கள். தேர்தல் காலங்களில் தமிழர் உரிமை, தமிழர் உரிமை என்பார்கள். தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள். பின்னர் அவர்கள் இலண்டனுக்குப் போய்விடுவார்கள். இதுதானே இதுவரை காலமும் நடந்தது.

சில தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் இங்கு தேர்தலில் போட்டியிடும் நிலையில் அவர்கள் அரசியல் சுற்றுலா பயணிகளாகவே உள்ளனர். நான் நினைக்கின்றேன் சுமந்திரனை விட நான் அதிகமாக யாழ்பாணம் போயிருப்பேன் என்று. எனவே, தேசிய மக்கள் சக்தி உங்களுடைய கட்சி." – என்றார்.



# ஐஸ் போதைப்பொருளுடன் சிக்கிய முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்

## 7 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்த நீதிமன்றம் அனுமதி

(எஸ்.ஜினோதன்)

முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடன் நுரைச்சோலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுரைச்சோலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் புத்தளம் , நுரைச்சோலை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் புத்தளம், கற்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் 41 வயதுடையவர் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து 7 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து மேலும் விசாரணைக்கு உட்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்று நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# டயனா கமகே மீதான வழக்கு ஒத்திவைப்பு



(எஸ்.ஜினோதன்)

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே மீது தொடரப்பட்ட வழக்கின் விசாரணையைக் கொழும்பு நீதிவான் நீதிமன்றம் ஜூலை 31 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

செல்லுபடியான வீசா இன்றி இலங்கையில் தங்கியிருந்தார் எனத் தெரிவித்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு எதிராக குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் 7 குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்திருந்ததமை குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கு இன்று கொழும்பு பிரதான நீதிமன்ற நீதிவான் தனுஜா லக்மாலி முன் விசாரிக்கப்பட இருந்த நிலையில், பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி இன்று சமூகமளிக்காமையின் காரணத்தால் குறித்த வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனவல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனவல இந்த வழக்கின் விசாரணையை ஜூலை 31 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.



# வானில் நாளை நிகழவுள்ள அரிதான காட்சி

(எஸ்.ஜினோதன்)

வானில் நாளை வெள்ளிக்கிழமை அரிதான காட்சி நிகழவுள்ளது. இந்தக் காட்சியை நாளை அதிகாலை 5.30 மணியளவில் கிழக்கு வானில் காண முடியும் என்று கொழும்பு பல்கலைக்கழக வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞான பிரிவின் பேராசிரியர் ஜானக அதாசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“செவ்வாய், வெள்ளி ஆகிய கோள்களும் சந்திரனும் நெருக்கமாகத் தோன்றும் அரிதான காட்சியை வெற்றுக் கண்களால் பார்வையிட கிடைத்த அரிய சந்தர்ப்பம் இதுவாகும். தொலைநோக்கி உள்ளிட்ட எந்தக் கருவியும் இதற்குத் தேவையில்லை.

சூரிய உதயத்துக்கு முன்னர் கிழக்கு வானில் இந்த அரிய காட்சி சுமார் ஒரு மணி நேரம் தென்படும். பூமியில் இருந்து பார்க்கும்போது இந்தக் காட்சி புன்னகை ஒரு முகத்தைப் போன்ற தோற்றத்தை ஒத்திருக்கும்.

மேலும் இந்தக் காட்சியின்போது இருப்பிடத்தை ஒத்து புதன் கோளையும் பார்வையிடலாம். உலகில் உள்ள அனைவரும் இந்தக் கட்சியைப் பார்வையிடலாம்.” – என்றார்.

# கலைகள் ஊடாக இளையோரை வழிப்படுத்துவதற்கு நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்









கலைகள் ஊடாக இளையோரை – மாணவர்களை வழிப்படுத்துவதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்பது தொடர்பில் ஆராயும் முதல்கட்டக் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்,

"இன்றைய இளையோர் மத்தியில் சமூகப்பிறழ்வு அதிகரித்துச் செல்கின்றது. இளையோருக்கு பொழுதுபோக்குவதற்கான நேரமும் குறைவாகவுள்ளதுடன் அவர்களுக்கு பொழுதுபோக்குக்கான இடவசதிகளும் இல்லை. பாடசாலை மாணவர்கள் பாடசாலை முடிந்த பின்னர் தனியார் கல்வி நிறுவனங்கள் என்று ஓடிக்கொண்டேயிருக்கின்றனர். அவர்கள் தங்களுக்கு கிடைக்கும் நேரத்திலும் கைத்தொலைபேசியில் மூழ்க்கிக் கிடக்கின்றனர். அவர்களுக்கு சிந்தனை மாற்றம் அவசியம். இதே நிலைமையைத் தொடர்வதற்கு அனுமதிப்பது ஆபத்தானது. கலைகள், விளையாட்டுக்கள் ஊடாகவே இந்த நிலைமையை மாற்ற முடியும் என என்னைச் சந்தித்த பலர் குறிப்பிட்டனர். இதில் தன்னார்வமாகச் செயற்படவும் ஆர்வமாக உள்ள அவர்களையும் பாராட்டுகின்றேன்." – என்றார்.

இதன் பின்னர் மூத்த கலைஞர்கள், விரிவுரையாளர்கள், மருத்துவர்கள் எனப் பல்வேறு தரப்புக்களையும் பிரதிநிதித்துவப்படுத்திக் கலந்துகொண்டவர்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்களிடமிருந்து இந்தச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது பொருத்தமானது எனக் குறிப்பிட்டதுடன் அதன் ஊடாக அந்தச் சமூகங்களில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் எனக் கருத்துகளை முன்வைத்தனர்.

மேலும் கடந்த காலங்களில் தம்மால் அவ்வாறு எடுக்கப்பட்ட முயற்சிகள் அதில் அடையப்பட்ட வெற்றிகள் தொடர்பிலும் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இதனை ஒருங்கிணைத்து தொடர்ச்சியாகச் செய்வதன் ஊடாகவே சாத்தியம் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இவற்றை முன்னெடுப்பதற்கான துறைசார் அரச அதிகாரிகள் உள்ளபோதும் இந்த விடயங்களை அவர்கள் அர்ப்பணிப்புடன் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்தனர்.

அதேநேரம், இதனை முன்னெடுப்பதிலுள்ள நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பிலும், இன்றைய மாணவ சமுதாயத்தின் எண்ணவோட்டங்களின் சிதறல்கள் தொடர்பிலும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி சுட்டிக்காட்டினார்.

பாடசாலைகளில் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உள்ள மட்டுப்பாடுகள் தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் தெளிவுபடுத்தினார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளுநர், முதல்கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 2 பாடசாலைகள் வீதம் தெரிவு செய்து இதனை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்து அந்தப் பரீட்சார்த்த முயற்சியின் அடிப்படையில் ஏனைய பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த முடியும் எனக் குறிப்பிட்டார்.

முன்னோடித் திட்டத்துக்கான பாடசாலைகளை சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் கல்வி அமைச்சின் செயலர் ஆகியோர் அடையாளப்படுத்துவது என்றும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர், வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மலேரியாப் பீதி!

இலங்கையில் மலேரியா நோய் முற்று முழுதாக ஒழிக்கப்பட்டு விட்டதாக உலக சுகாதார ஸ்தாபனம் சில வருடங்களுக்கு முன்னர் கூறியிருந்த நிலையில் நாட்டில் மீண்டும் மலேரியா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பரவல் சமீபத்தில் வெளிநாடுகளில் இருந்து திரும்பிய நபர்களிடம் கண்டறியப்பட்டுள்ளது என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

மலேரியா மீண்டும் இலங்கைக்கு வருவதைத் தடுக்க வலுவான திட்டத்தைப் பராமரித்து வருவதாகவும் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மலேரியா இல்லாத நாடாக 2016 இல் உலக சுகாதார ஸ்தாபனத்திடம் சான்றிதழ் பெற்றது. 2018 ஆம் ஆண்டில் இலங்கையில் மலேரியா முற்றாக அகற்றப்பட்டாலும், பாதிக்கப்பட்ட வெளிநாட்டு தொழிலாளரிடமிருந்து உள்ளூரில் பலர் மலேரியாவால் பாதிக்கப்பட்டமை பற்றிய செய்திகள் அவ்வப்போது வெளியாகிக் கொண்டுதான் இருக்கின்றன.

எமது நாட்டில் மலேரியா நோயைப் பரப்பக் கூடிய நுளம்புகள் உலர் வலயப் பிரதேசங்களில் இன்னமும் காணப்படுகின்றன.

இந்நிலையில் மலேரியா பரம்பல் உள்ள நாடொன்றுக்கு சென்று அங்கு நோய் தொற்றுக்குள்ளாகி வருபவர்கள் மூலம் உள்நாட்டில் மலேரியா பரம்பல் ஏற்பட வாய்ப்புள்ளது.

வெளிநாடொன்றில் மலேரியா தொற்றுக்குள்ளாகும் ஒருவருக்கு ஒரு வருட காலம் வரை எந்தவித நோய் அறிகுறிகளும் இல்லாது காணப்படலாம்.

ஆனால் அவர் இலங்கை வரும் போது அவர் மூலம் ஏனையவர்களுக்கு இந்நோய் பரவும் வாய்ப்புள்ளது என மருத்துவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். எனவே மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்குப் பயணம் செய்பவர்கள் மலேரியாத் தடுப்பு மருந்துகளைக் கட்டாயம் பாவிக்க வேண்டும் என்று அவர்கள் ஆலோசனை கூறுகின்றனர்.

தற்போது, தென்னாபிரிக்கா, உகண்டா, சூடான், ருவண்டா, மொசாம்பிக், மடகஸ்கார், மத்திய ஆபிரிக்க குடியரசு, கானா, சைபீரியா, தன்சானியா, சிம்பாவே, பப்புவா நியூகினியா, ஸியாராலியோன், சவுதி அரேபியா, தாய்லாந்து, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் மலேரியா பரம்பல் காணப்படுகிறது.

எனவே மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்கு செல்வதற்கு முன்னர் மலேரியா தடுப்பு மருந்தைப் பாவிக்க தொடங்குவதன் மூலம் மலேரியாத் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என்று ஆலோசனை கூறப்படுகின்றது. இத்தடுப்பு மருந்துகளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் அல்லது மலேரியா தடை இயக்க பணிமனையிலும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டது.

மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்குச் சென்று திரும்பிவந்த பின்னர் மலேரியா குருதிப் பரிசோதனையைக் கிரமமாகச் செய்வதன் மூலம் மலேரியா தொற்று உள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

ஏற்கனவே நாட்டில் டெங்கு, சிக்கன்குனியா என்று நுளம்புகளால் பரவும் தொற்று நோய்கள் சில்லெடுத்து வருகையில் மறுபக்கத்தில் மலேரியாப் பரவலும் மக்களைப் பீதியில் ஆழ்த்தும் அவலம் ஏற்பட்டிருக்கின்றது.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம்; நாள் கூலி முறைமையை ஒழிப்பதே தீர்வு!

## நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

**(பொகவந்தலாவ எஸ். சதீஸ், மஸ்கெலியா)**

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பானது நிரந்தர தீர்வாக அமையாது. மாறாக நாள் கூலி முறைமையை இல்லாதொழிப்பதே நிரந்தர தீர்வாகும்.

நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட தோட்ட பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிராசார கூட்டம், நாடாளுமன்ற உறுப்பினரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் டிக்கோயா, வனராஜா, போடைஸ், பட்டல்கள, கெர்கர்ஸ்வோல்ட், மோரா ஆகிய பகுதிகளில் நேற்று (23) இடம்பெற்றது.

இதன்போது தேர்தல் பிராசார கூட்டத்தில் கலந்துக்கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

தொடர்ந்து மக்கள் மத்தியில் உரையாற்றுகையில்,

நாட்டின் ஜனாதிபதி தேர்தல் காலங்களில் மக்கள் மத்தியில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருந்தார். ஆனால் தற்போது அவர் வாக்குறுதிகளை மறந்து எதிர்கட்சித் தலைவர் போன்று செயற்பட்டு வருகின்றார்.

ஜனாதிபதி தேர்தல் காலங்களில் தோட்ட தொழிலாளர்களுக்கு கணிசமான சம்பள அதிகரிப்பை வழங்குவதாக உறுதியாக அறிவித்ததுடன், வரவு செலவு திட்ட வாசிப்பிலும் தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது அனைத்தையும் மறந்து தோட்டக் கம்பனிகளுடன் கலந்துரையாடி முடியுமான அளவு 1700 ரூபா நாள் சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க முயற்சிப்பதாக அறிக்கை விடுத்துள்ளார். இதனை ஏமாற்று நாடகமாகவே புறிந்துக் கொள்ள வேண்டும்.

நான் அமைச்சராக இருந்த காலப் பகுதிகளில் ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாக என்னால் முடிந்தளவிலான வேலைகளை மக்கள் நலனுக்காக செய்திருந்திருந்தேன்.

தற்போது ஜானாதிபதியால் வரவு செலவு திட்டத்தினூடாக மலையகப் பெருந்தோட்ட பகுதிகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் அநீதி இழைக்கப்பட்ட கண்துடைப்பாகவேகாணப்படுகின்றது.

கடந்த வருடத்தில் நாங்கள் அரசில் இருந்தபோது அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் பெருமளவிலான நிதி ஒதுக்கீடு மேற்கொண்டிருந்ததை யாரும் மறந்துவிட முடியாது.- என்றார்.





# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# இந்திய அரசின் அபிவிருத்தி திட்டங்கள் பாதிப்பை ஏற்படுத்தாது இருக்க வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இந்தியாவுடன் கூடுதல் நெருக்கத்துடன் நாங்கள் இருக்கிறோம். இந்திய அரசு மன்னாரில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அவர்கள் எத்தனை அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தாலும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது நன்மை தரக்கூடிய அனைத்து அபிவிருத்தி திட்டங்களையும் ஆதரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்தில் நேற்று புதன்கிழமை (23) இரவு நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றம் ஒரு சிறிய அரசாங்கம்.அதன் பணி வீதி அமைப்பது,தெரு மின் விளக்கு போடுதல் மாத்திரமே என்று நினைக்க வேண்டாம்.இந்த உள்ளூராட்சி சபைகள் ஊடாகவே பல்வேறு சட்டங்களையும், பிரதேசங்களுக்கான வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்த முடியும்.

எமது பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத மண் அகழ்வை நாங்கள் எமது சபைகள் ஊடாக தடை செய்ய முடியும்.மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு பகுதியில் சுற்றுலாத்துறையையும் அபிவிருத்தி செய்ய முடியும்.

அதற்கான வேலைத்திட்டங்களும் எமது பிரதேச சபை ஊடாக முன்னெடுக்க முடியும். எந்த அபிவிருத்தியாக இருந்தாலும் பிரதேச சபைகள் ஊடாகவே முன்னெடுக்கப்படும்.

மன்னார் மாவட்டத்திற்கான அனைத்து அபிவிருத்திகளையும் எமது சபைகள் ஊடாக முன்னெடுக்க முடியும்.


இந்தியாவுடன் கூடுதல் நெருக்கத்துடன் நாங்கள் இருக்கிறோம்.இந்திய அரசு மன்னாரில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.


அவர்கள் எத்தனை அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தாலும்,மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது நன்மை தரக்கூடிய அனைத்து அபிவிருத்தி திட்டங்களையும் ஆதரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

உதாரணமாக ராமேஸ்வரம், தலைமன்னார் கப்பல் சேவை வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளது. இவ்வாறான நல்ல விடயங்களுக்கு நாங்கள் இந்தியாவுடன் இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாக எமது பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்து கொள்ள முடியும்.-என்றார்.






EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# சங்கானை பிரதேச வைத்தியசாலை பஸ் சேவைகள் ஆரம்பித்து வைப்பு

**(எஸ். நிதர்ஷன்)**

யாழ். சங்கானை பிரதேச வைத்திய சாலையின் மூலம் பஸ் சேவைகள் நேற்று (23) காலை சம்பிரதாய பூர்வமாக நாடாவெட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த சங்கானை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், 788 வழித்தட சங்க பஸ் உரிமையாளர்களிடம் சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு வருகைதரும் நோயாளிகளின் நலன் கருதி வைத்தியசாலையின் ஊடாக பஸ் சேவைகளை முன்னெடுக்குமாறு வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தால் கோரிக்கை முன்வைக்கப் பட்டது.

இந்த நிலையில் நேற்று முதல் கீரிமலை இளவாலை, தொட்டிலடி, மானிப்பாய், யாழ்ப்பாணம் வரை சேவையில் ஈடுபடும் 788 வழித்தட தனியார் பஸ் சேவையிலுள்ள மூன்று பஸ்கள் சேவை குறித்த வைத்தியசாலையின் ஊடாக மேற்கொள்ளவுள்ளன.

இதன் மூலம் சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு செல்லும் பல தரப்பினரும் நன்மைகளை பெற்றுகொள்ள கூடியதாக இருக்கும் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிகழ்வில் சங்கானை வைத்திய சாலை நலன்புரி சங்கத்தினர், யாழ். மாவட்ட கூட்டிணைக்கபட்ட தனியார் பஸ் கம்பனிகளின் சங்கத்தின் தலைவர் கெங்காதரன், இளவாலை சிற்றூர்திச் சங்கத் தலைவர், சங்கானை பிரதேச செயலர், மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வைத்தியசாலை மருத்துவர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




GUNAAM SUPERMARKET
Gsm
குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# சிலாபத்தில் வீதிகளில் வெள்ளம்!

(உடப்பு க.மகாதேவன்)

சிலாபத்தில் பெய்த மழை காரணமாக சில வீதிகளில் நேற்று வெள்ளம் ஏற்பட்டது.

அதே நேரம் தெதுருஓயாவில் ஓரளவு மழை நீர் நிறைந்து காணப்படுகிறது.

சிலாபம் நகரில் வடிகால்கள் அடைபட்டதன் காரணமாக இந்த வெள்ளம் வீதிகளில் தேங்கியது என்று சிலாபம் மக்கள் தெரிவித்தனர்.









# நில அளவைத் திணைக்களத்துக்குக் கட்டடம்!

(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறையில் நில அளவைத் திணைக்களத்துக்கு நிரந்தரமான கட்டடம் இன்மையால் இதுவரை காலமும் பிரதேச சபைக் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது.

இந்தக் கட்டடத்தில் போதியளவு வசதி வாய்ப்புகள் இல்லாமையால் நில அளவைத் திணைக்களத்தால் சம்மாந்துறை பிரதேச செயலாளரிடம் விடுத்த கோரிக்கைக்கமைய பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபாவின் முயற்சியால் சென்.ஜோன்ஸ் அம்பியூலன்ஸுக்குச் சொந்தமான கட்டடம் நேற்று வழங்கப்பட்டது.

நில அளவைத் திணைக்களத்துக்கு பிரதேச செயலாளர் முன்னிலையில் வைத்து அதற்கான ஆவணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரமவின் ஆலோசனையின் பெயரிலும் பிரதேச செயலாளரின் முயற்சியாலும் இது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் நில அளவைத் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் ஜி.ஆர்.எல் பெரேரா, சம்மாந்துறை பிரதேச நில அளவை அத்தியட்சகர் ஏ.எஸ்.எம். நஜாகத், சென். ஜோன்ஸ் அம்புயூலன்ஸ் மாவட்ட ஆணையாளர் கெப்டன் எம்.டி. நௌஸாத் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

நில அளவைத் திணைக்களத்துக்காக இந்தக் கட்டம் வழங்கப்பட்டதால் சம்மாந்துறை, இறக்காமம், சென்றல் கேம்ப் போன்ற பிரதேசங்களின் உள்ள பொது மக்கள் நன்மை அடைவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# சுற்றுச்சூழல் சுகாதாரம் தொடர்பில் மாளிகைக்காட்டில் கள ஆய்வுகள்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் மாளிகைக்காடு கிழக்கு கடற்கரை பகுதி சுற்றுசூழல் சுகாதாரம் தொடர்பான கள ஆய்வு மற்றும் கழிவகற்றல் முகாமைத்துவம் தொடர்பான பரிசோதனை செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இதன் போது காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லீமா வசீர், பொது சுகாதார பரிசோதகர் உத்தியோகாதர்கள், பகுதி கிராம சேவகர், காரைதீவு பிரதேசசபை செயலாளர், கடற்சூழல் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகாதர்கள், மீன்வாடி சங்க உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய ஏனைய திணைகள உத்தியோகதர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது இந்தப் பகுதி வியாபார நிலையங்களின் திண்ம, திரவ கழிவகற்றல் முகாமைத்துவம் தொடர்பான தொழிநுட்ப திட்ட ஆலோசனை சுகாதார வைத்திய



அதிகாரியால் முன் மொழியபட்டது. மேலும் இந்தப் பகுதியில் அனைத்து அரச நிறுவங்களின் பங்களிப்போடும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்வது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

# உள்ளூராட்சி தேர்தல் காலங்களில் மக்களின் அடிப்படை உரிமை மீறினால் முறையிடலாம்!

**மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவிப்பு**

**(வி.ரி. சகாதேவராஜா)**

கல்முனைப் பிராந்தியத்தில் உள்ளூராட்சி தேர்தல் காலத்தில் பொது மக்களின் அடிப்படை உரிமை மீறினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யலாம் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.அப்துல் அஸீஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிராந்தியத்தில் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பும், தேர்தல் தினத்தன்று அல்லது தேர்தலின் பின்னர் அரச, நிர்வாக, நிறைவேற்றுத் துறையினர் அடிப்படை உரிமையை மீறியதற்கான அல்லது மீறப்படுவதற்கான காரணங்கள் காணப்படுமாயின் முறைப்பாடு செய்ய முடியும்.

தேர்தல் காலத்தின் போது, தேர்தல் சட்டங்கள், நாட்டின் ஏனைய சட்டங்கள்,



நாட்டின் அரசியல் அமைப்புக்கு இணங்க அந்தத் தேர்தல் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கு அரச உத்தியோகத்தர்கள் கடமைப்பட்டுள்ளனர்.

இது ஒவ்வொரு விடயத்துக்கும் பொறுப்பான அரச உத்தியோகத்தர்கள் அந்தச் சட்டங்களுக்கு அமைவாகத் தங்களது கடமைகளை நியாயமானதாகவும் பக்கச்சார்பின்றியும் செயற்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

1978 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பு யாப்பின்படி, மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை, சுதந்திரமாக அரசியலில் ஈடுபடும் உரிமை, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான உரிமைகளுடன் சட்டத்துக்கு முன் யாவரும் சமம் என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு அரச உத்தியோகத்தர்களும் அரசியல் அமைப்புக்கு அமைவாக செயற்படுவதற்கு உறுதிமொழி செய்துள்ளனர். அரச உத்தியோகத்தர்கள் கொண்டுள்ள சட்ட ரீதியான கடமைகளையும், பொறுப்புக்களையும் தவறாகப் பயன்படுத்துதல் அல்லது நடவடிக்கை மேற்கொள்ளாமல் விடல் பக்கச்சார்பாக செயற்படல் அரசியல் அமைப்பு யாப்பின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும்.

அவ்வாறு மீறும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதிராக 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குப் புலனாய்வுகள் மற்றும் விசாரணைகளை நடத்துவதற்கும் அவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.- என்றார்.





# இயலாமை கொண்ட நபர்களுக்கான அணுகல் வசதி தொடர்பான ஆய்வு!

**(த.சுபேசன்)**

இயலாமை கொண்ட நபர்களுக்கான அணுகல் வசதிகள் தொடர்பான ஆய்வு அறிக்கை வெளியீட்டு நிகழ்வு நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றிருந்தது.

தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச ஒன்றியத்தின் ஏற்பாட்டில் “பேவ்” செயற்திட்ட இளைஞர் குழுவின் முயற்சியாக, இயலாமை கொண்ட நபர்களுக்கான ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்போது ஆய்வறிக்கையின் முதற்பிரதியை யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் வாகீசன், யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்



திருமதி கோசலை மதன், யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடமாகாண உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள், மாற்றுத் திறனாளிகள் சங்க பிரதிநிதிகள், தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச ஒன்றியத்தின் நிகழ்ச்சித்திட்ட அலுவலர் ஜொகான்சன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரர்முதா மற்றும் “பேவ்” செயற்றிட்ட இளைஞர் குழுவினர் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது இயலாமை கொண்ட நபர்களுக்கான தேர்தல் வசதிப்பாடுகள் குறித்த விடயங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

# லஞ்ச ஊழல் ஆணைக் குழுவல் கல்முனையில் இரண்டு பேர் கைது!

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ், பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை இலங்கை போக்குவரத்து சபை அலுவலகத்தில் ஒரு லட்சம் ரூபா லஞ்சம் வாங்க முற்பட்ட போது லஞ்ச ஊழல் ஆணைக்குழு உத்தியோகத்தர்களால் நேற்று முன்தினம் (22) செவ்வாய்க்கிழமை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர் ஒருவரை மீண்டும் சேவைக்கு இணைத்துக் கொள்வதற்காக கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகரால் ஒரு லட்சம் ரூபா பணம் லஞ்சமாகக் கோரப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தினை பாதுகாப்பு உத்தியோகத்தர் ஊடாக கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை இடம்பெற்ற போது, மறைந்திருந்த லஞ்ச ஊழல் ஆணைக்குழு உத்தியோகத்தர்களால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

லஞ்சமாக கொடுக்க முற்பட்ட பணத்தை மீட்டதுடன் 53 மற்றும் 47 வயதுடைய இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களான கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர் ஒருவரையும் அங்கு கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை லஞ்ச ஊழல் ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.



# உயர் வகுப்பு மாணவர் குழுவால் தாக்கப்பட்ட இளைஞன் உயிரிழப்பு

(உடப்பு க.மகாதேவன்)

பாடசாலை ஒன்றில் உயர் வகுப்பு மாணவர்கள் குழுவொன்றின் தாக்குதலுக்கு உள்ளாகி, கடுமையான காயங்களுடன் குருணாகலை வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சுமார் 07 நாள்கள் சிகிச்சை பெற்று வந்த மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் ரிதீகம – வெலெகெதர – ஷகரலிய வத்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர், குருணாகலை – புலுவல மகா வித்தியாலயத்தில் 11 ஆம் தரத்தில் கல்வி கற்ற மாணவன் ஆவார். கடந்த 16 ஆம் திகதி, ரிதீகம – வெலெகெதர – அங்ஹுந்திய பகுதியில் நடைபெற்ற புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வில் பங்கேற்பதற்காக, குருணாகலை – புலுவல மகா வித்தியாலயத்தில் 11 ஆம் தரத்தில் கல்வி



கற்ற திலிண விராஜ் என்ற மாணவன் சென்றிருந்தான்.

திலிண செல்லும் வழியில், அதே பாடசாலையில் இந்த ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் குழுவொன்றும், மற்றொரு வெளியாள்கள் குழுவும், தனிப்பட்ட பகைமையை காரணமாகக் கொண்டு அந்த மாணவனைத் தாக்கியுள்ளன.

இதன்போது, பாதுகாப்பு தலைக் கவசங்களால் மாணவனின் தலையில் தாக்கப்பட்டதால், அவர் மயக்கமடைந்த நிலையில் முதலில் மாவத்தகம முதன்மை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காகக் குருணாகலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

குருணாகலை வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மாணவன் நேற்று (23) உயிரிழந்துள்ளார்.

மாணவனைத் தாக்கிய சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல் நடத்திய அனைத்து சந்தேக நபர்களையும் கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தி, குருணாகலை – வெலெகெதர பொலிஸ் நிலையத்தின் முன்பாக ஷகரலிய தோட்ட பகுதி மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# காரைதீவில் களைகட்டியது புத்தாண்டு விளையாட்டு விழா

( காரைதீவு சகா)

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 42 ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் முகமாகவும் காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலாநந்தா சனசமுக நிலையமும் இணைந்து நடத்திய கலாசார விளையாட்டு விழா கழகத் தலைவர் எல்.சுரேஸ் தலைமையில் மிகவும் நடைபெற்றது.

விழாவில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் கலந்து கொண்டார்.

பிரதான அனுசரணை வழங்கிய கல்முனை சொர்ணம் குழுமங்களின் ஸ்தாபக தலைவர் பிரபல நகை தொழிலதிபர் எம்.விஸ்வநாதன் கலந்துகொண்டு கல்விச் சாதனையாளர்களுக்கு பரிசுகளை வழங்கி வைத்தார். அவருடன் சொர்ணம் குழுமங்களின் கொழும்புக் கிளை சுந்தர் மற்றும் கல்முனைக் கிளை குணா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பரிசளிப்பு நிகழ்வில் அனுசரணை வழங்கிய அஸ்கோ நிறுவன செயலாளர் எஸ்.நந்தகுமார், கழக போசகர் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, பிரதேச சபை செயலாளர் அ.சுந்தரகுமார், தலைமை மருந்தாளர் ப.சந்திரமோகன், முன்னாள் தவிசாளர் கி. ஜெயசிறில் ஆகியோரும் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர்.







# தீவிரவாதிகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்: ஸ்டாலின் வலியுறுத்தல்

ஜம்மு - காஷ்மீர் தீவிரவாத தாக்குதலுக்கு சட்டப்பேரவையில் கண்டனம் தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், பயங்கரவாத அமைப்புகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் முடிவில், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

"ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள பெஹல்காமில் அப்பாவி சுற்றுலாப் பயணிகள் மீது நேற்று நடத்தப்பட்டுள்ள மனிதாபிமானமற்ற, பயங்கரவாத தாக்குதலுக்குக் கடும் கண்டனத்தையும், அதில் உயிரிழந்த அனைவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஷ்மீர் மாநிலத்தின் மிகப் பிரபலமான சுற்றுலாத் தலமான பெஹல்காமுக்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

அங்கு பைசாரன் மலைப்பகுதியில் இருந்து திடீரென நுழைந்த தீவிரவாதிகள் சுற்றுலாப் பயணிகள் மீது இரக்கமற்ற வகையில் கொடூரமான தாக்குதலை நடத்தியுள்ளனர். இதில் இதுவரை 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டிருப்பது கடும் அதிர்ச்சியையும். துயரத்தையும் அளித்துள்ளது. அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் இதுபோன்ற பயங்கரவாத தாக்குதல் கடுமையாக கண்டிக்கத்தக்கது.

இந்தத் தாக்குதலுக்கு பயங்கரவாத அமைப்பு ஒன்று பொறுப்பேற்றுள்ளது. பயங்கரவாத, தீவிரவாத அமைப்புகள் எத்தகைய எண்ணம் கொண்டவையாக இருந்தாலும் அவற்றை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்.

இந்தத் தாக்குதலில் தமிழகத்தைச் சேர்ந்த சிலரும்



பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல் எனக்குக் கிடைத்தவுடன் உடனடியாக டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத் தில் 24 மணி நேரமும் செயல்படும் சிறப்பு உதவி மையம் தொடங்க உத்தரவிட்டேன்.

காஷ்மீர் மாநில அரசுடன் இணைந்து பணியாற்றி, இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உரிய உதவியைச் செய்யுமாறு உத்தரவிட்டிருக்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில் பணியாற்றி வரும் கூடுதல் ஆட்சியரும், ஐஏஎஸ் அதிகாரியுமான அப்தாப் ரசூலை நேரடியாக பெஹல்காம் பகுதிக்குச் சென்று ஒருங்கிணைப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளவும், தேவையான மருத்துவ வசதிகளை வழங்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இத்தாக்குதலில் பாதிக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் அனைவருக்கும் தேவையான சிகிச்சைகள் வழங்கப்படுவதை உறுதி செய்து பத்திரமாக அழைத்து வர தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. காஷ்மீரில் நடந்துள்ள இந்தத் தாக்குதல் நம் அனைவரது மனச்சாட்சியையும் உலுக்குவதாக அமைந்துள்ளது."- என்றார்.

# தீவிரவாத தாக்குதலை கண்டித்து காஷ்மீரில் முழு கடையடைப்பு!


## அரசியல் கட்சிகள், மத அமைப்புகள் ஆதரவு

தீவிரவாத தாக்குதலை கண்டித்து, காஷ்மீர் பள்ளத்தாக்கில் எரிபொருள் நிரப்பு நிலையம் உட்பட வர்த்தக நிறுவனங்களை மூடி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டனர். முக்கிய சுற்றுலா தலங்கள் உட்பட பள்ளத்தாக்கு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், தீவிரவாதிகள் தாக்குலை கண்டித்து காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் வர்த்தக நிறுவனங்களை மூடி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்த கடையடைப்புக்கு அரசியல் கட்சிகள், மத அமைப்புகள், வர்த்தக நிறுவனங்கள் உட்பட அனைத்து அமைப்புகளும் முழு ஆதரவு தெரிவித்தன. தேசிய மாநாட்டு கட்சி, மக்கள் ஜனநாயக கட்சி, மக்கள் மாநாடு, அப்னி கட்சி உட்பட பல்வேறு அரசியல் கட்சிகள் கடையடைப்புக்கு ஆதரவு தெரிவித்தன.

மேலும், கடையடைப்புக்கு ஜம்மு காஷ்மீரில் செயல்படும் முதாஹிதா



மஜ்லிஸ் உலமாவை (எம்.எம்.யு) சேர்ந்த மிர்வெய்ஸ் முழு ஆதரவு தெரிவித்துள்ளார். காஷ்மீர் சேம்பர் ஆப் காமர்ஸ் மற்றும் தொழிற்துறையினரும் கடையடைப்புக்கு ஆதரவு அளித்துள்ளனர்.

இதனால் காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டன. அத்துடன், வர்த்தக நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டன. காஷ்மீர் பல்கலைக்கழகம் தனது தேர்வை தள்ளி வைத்துள்ளது. அரசு போக்குவரத்து நிறுத்தப்பட்டது. அத்தியாவசிய பொருள்கள் விற்பனை கடைகள் மட்டும் இயங்கின. பல்வேறு இடங்களில் தீவிரவாதிகளை கண்டித்து ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன.

அப்போது அப்பாவி பொதுமக்களை கொல்வதை தடுக்க வேண்டும் என்று கோஷமிட்டனர். கடந்த 35 ஆண்டுகளுக்கு பிறகு காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் முடங்கியது இதுதான் முதல் முறை. வழக்கத்துக்கு மாறாக பொதுமக்களிடம் இருந்து கடும் எதிர்ப்பு தற்போது எழுந்துள்ளது.





## பஹல்காம் தீவிரவாத தாக்குதல்:

# திருமணமான ஒரே வாரத்தில் கொல்லப்பட்ட கடற்படை அதிகாரி

இந்திய கடற்படையில் லெப்டினன்ட் அதிகாரியாக பணியாற்றிய வினய் நர்வால் திருமணமான ஒரே வாரத்தில், காஷ்மீருக்கு தேன்நிலவு சென்றபோது தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது உடலுக்கு நேற்று கடற்படை சார்பில் இறுதி மரியாதை அளிக்கப்பட்டது.

இந்திய கடற்படையில் லெப்டினன்ட்டாக பணியாற்றியவர் வினய் நர்வல் (வயது 26). ஹரியானாவைச் சேர்ந்த இவர் கொச்சியில் பணியாற்றுகிறார். இவருக்கும் ஹிமான்சி என்ற ஆசிரியைக்கும் கடந்த 16 ஆம் திகதி தான் திருமணம் நடைபெற்றது. தேனிலவுக்கு சுவிட்சர்லாந்து செல்ல இவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

விசா கிடைக்க தாமதமானதால் காஷ்மீருக்கு சென்றனர். பஹல்காமில் உள்ள ரோட்டோர கடையில் பேல்பூரி சாப்பிட்டு கொண்டிருந்த போது அங்கு வந்த தீவிரவாதி வினய் நர்வலை சுட்டுக் கொன்றார்.

இவரது உடல் அருகே அவரது மனைவி ஹிமான்ஷி சோகத்துடன் அமர்திருந்த போட்டோ வைரலாக பரவியது. வினய் நர்வாலுக்கு டில்லியில் கடற்படை சார்பில் நேற்று இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. அப்போது கணவரின் சவப்பெட்டியை கட்டிப்பிடித்து ஷிமான்ஷி அழுதார். ஜெய்ஹிந்த் என வீர முழக்கம் எழுப்பினார்.












# பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் உடலுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

நித்திய இளைப்பாறுதல் அடைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் திருவுடலுக்கு மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் திருவுடல் வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் நாளை மாலை 7 மணி வரை பரிசுத்த பாப்பரசரின் திருவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை அந்நாட்டு நேரப்படி காலை 10 மணிக்கு பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் நல்லடக்க ஆராதனை இடம்பெறவுள்ளது.










# ட்ரம்பின் வரி கொள்கையை தடுக்கக் கோரி 12 அமெரிக்க மாநிலங்கள் வழக்கு தாக்கல்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரிக் கொள்கையைத் தடுக்கக் கோரி, சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தில் ட்ரம்ப் நிர்வாகத்திற்கு எதிராக 12 அமெரிக்க மாநிலங்கள் வழக்குத் தொடர்ந்துள்ளன.

இவ்வாறு வரி விதிப்பது சட்டவிரோதமானது என்றும், நாட்டின் பொருளாதாரம் குழப்பகரமான ஓர் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர்.

அதன்படி இந்த வழக்கில் ஓரிகான், அரிசோனா, கொலராடோ, கனெக்டிகட், டெலாவேர், இல்லினாய்ஸ், மைனே, மினசோட்டா, நெவாடா, நியூ மெக்ஸிகோ, நியூயோர்க் மற்றும் வெர்மான்ட் ஆகிய மாநிலங்கள் வாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளன.

கனடா முரசு
பக்கம் 04
வியாக்கிழமை 24/04/2025

## பெண்ணுக்கு கொலை மிரட்டல் விடுத்த நபரை தேடும் பொலிஸ்

கனடாவின் ஸ்கார்ப்ரோ பகுதியில் பெண் ஒருவருக்கு கொலை மிரட்டல் விடுத்த குற்றச்சாட்டின் பேரில் நபர் ஒருவரைத் தேடி வருவதாக பொலிஸார் தெரிவிக் 02



# கனடா காணாமல் போய்விடும்: மீண்டும் எச்சரிக்கின்றார் ட்ரம்ப்

**அமெரிக்கா கனடாவிடம் பொருள்கள் வாங்கவில்லையென்றால், கனடா என்று ஒரு நாடே இருக்காது என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மீண்டும் எச்சரித்துள்ளார்.**

**கனடாவுக்கு பொருளாதார ரீதியில் அழுத்தம் கொடுத்து, கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக ஆக்கப்போவதாக ட்ரம்ப் மிரட்டி வந்தார்.**

கனடா மக்களோ, அமெரிக்கப் பொருள்களையே புறக்கணித்துவிடுவோம் என பதிலடி கொடுத்துள்ளார்கள்.

அத்துடன், இனி அமெரிக்காவுக்கு சுற்றுலாவும் வரமாட்டோம் என கனேடியர்கள் பலர் கூறிவருகிறார்கள்.

இருந்தும் தனது நிலைப்பாட்டிலிருந்து சற்றும் மாறாத ட்ரம்ப், எங்களுக்கு கனடாவின் கார்கள் வேண்டாம். நாங்களே எங்களுக்கான கார்களை தயாரித்துக்கொள்கிறோம்.

ஆனால், அமெரிக்கா கனேடிய தயாரிப்புகளை வாங்கவில்லையென்றால், கனடா என்றொரு நாடே இருக்காது என்று ட்ரம்ப் கூறியுள்ளார்.

# பிரிட்டிஷ் கொலம்பியாவில் மலையேறிய சிறுவன் பலி

பிரிடிஷ் கொலம்பியாவின் உள்ளகப்பகுதியில் உள்ள பாஸ்டியன் மலைப்பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 17 வயதான சிறுவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மலையேறும் போது ஏற்பட்ட விபத்தினால் அந்த சிறுவன் உயிரிழந்துள்ளார் .திங்கள் பிற்பகலில், மூன்று இளைஞர்கள் சால்மன் ஆர்ம்க்கு வடக்கே உள்ள பாஸ்டியன் மலைப்பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது, அவர்களில் ஒருவர் 200 அடி உயரமுள்ள பாறையின் உச்சிக்கு அருகில் இருந்து கால் தவறி கீழே விழுந்துள்ளார் என சந்தேகிக்கப்படுகிறது.

அந்த மூவரில் ஒருவரின் தந்தை, பாறையின் அடியில் உணர்வின்றி இருந்த சிறுவனை கண்டுள்ளார். தேடுதல் மற்றும் மீட்பு குழு, சம்பவ இடத்திற்கு விரைந்த போதிலும், சிறுவன் ஏற்கனவே உயிரிழந்திருப்பது உறுதிப்படுத்தியுள்ளனர்.

“இது நம் சமுதாயத்தை ஆழமாக பாதிக்கும் இன்னொரு சோகமான சம்பவம்” என பொலிஸ் அதிகாரி ஸ்டாஃப் சார்ஜென்ட் சைமன் ஸ்காட் தெரிவித்தார்.



“இளமை வயதில் ஒரு உயிரின் இழப்பு மிகுந்த துயரமளிக்கிறது. பாதிக்கப்பட்ட குடும்பம், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கல்கள் என தெரிவித்துள்ளார்.

சம்பவம் குறித்து பிரிடிஷ் கொலம்பியா மரண விசாரணை சேவை தற்போது விசாரணை மேற்கொண்டு வருகிறது.




# அமெரிக்கா பயணிப்பதை தவிர்க்கும் கனேடியர்கள்

அமெரிக்க எல்லையில் கனேடியர்கள் தடுத்து வைக்கப்படுவதுடன், விலங்கிடப்பட்டு சிறையில் தள்ளும் அபாயம் இருப்பதால் ட்ரம்பின் புதிய அமெரிக்காவிற்கு பயணிப்பதை தவிர்த்து வருகின்றனர் என புதிய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இருப்பினும், வெறும் 15 சதவீத மக்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் அமெரிக்காவிற்கு பயணிக்கின்றனர் என வெளிவந்துள்ளது. 2024 ஆம் ஆண்டினை ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கையானது மிக மிகக் குறைவு என்றே கூறப்படுகிறது.

எஃகு, அலுமினியம், கார்கள் மற்றும் வாகன பாகங்கள் மீதான ட்ரம்பின் வரிகளால் கனடா தத்தளிக்கும் நிலையில், அமெரிக்காவின் 51வது மாகாணமாக கனடாவை இணைக்க வேண்டும் என்று ட்ரம்ப் பலமுறை அழைப்பு விடுத்து வருவதும் கனேடிய மக்களை கொந்தளிக்க வைத்துள்ளது.

மேலும் கனேடிய நடிகை, 35 வயதான Jasmine Mooney என்பவர் அமெரிக்க மெக்சிகோ எல்லையில் விசா விவகாரம் தொடர்பில் தடுத்து நிறுத்தப்பட்டு, 12 நாள்களுக்குப் பின்னரே விடுவிக்கப்பட்டார்.

மட்டுமின்றி, ட்ரம்பிற்கு பதிலடி தரும் வகையில், உள்ளூர் பொருள்களை மட்டுமே வாங்க வேண்டும் என கனேடிய மக்களிடையே எழுந்த ஆர்வமும் முன்னெடுக்கப்பட்ட புதிய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

2024 இல் மட்டும் 20 மில்லியன் கனேடிய மக்கள் அமெரிக்காவிற்கு பயணப்பட்டுள்ளனர். ஆனால் ட்ரம்ப் ஜனாதிபதியாக பொறுப்புக்கு வந்த தன் பின்னர் இந்த எண்ணிக்கை கடும் சரிவினை சந்தித்துள்ளது.

இரு நாடுகளும் உலகின் மிக நீளமான எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன, முழுமையாக ஒருங்கிணைந்த ஆயுதப் படைகளைக் கொண்டுள்ளன. மேலும் மற்றவரை தங்கள் பிடித்த வெளிநாட்டினராக வாக்களிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஆனால், ட்ரம்பிற்கு எதிரான கடுமையான விமர்சனங்களை முன்வைப்பதால், பிரதமர் மார்க் கார்னியின் லிபரல் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் நிலைக்கு முன்னேறியுள்ளது.

துரோகத்தின் அதிர்ச்சியிலிருந்து நாம் மீண்டுவிட்டோம். ஆனால் பாடங்களை நாம் ஒருபோதும் மறந்து விடக் கூடாது என்று கார்னி வெளிப்படையாக கூறியுள்ளது கனேடிய மக்களிடையே கவனத்தை ஈர்த்துள்ளது.

மேலும், கடுமையான விசா நடைமுறைகளுக்கு பயந்து, கனேடியர்களும் அமெரிக்காவின் பிற நட்பு நாடுகளும் அமெரிக்காவிற்கு பயணம் செய்வதற்கான வாய்ப்புகள் குறைவு என்றே குறிப்பிட்டுள்ளனர்.

கனடாவிலிருந்து அமெரிக்காவிற்கான சுற்றுலா மிகப்பெரிய சரிவைக் கண்டுள்ளது. மற்றொரு பாரம்பரிய நட்புப் பிராந்தியமான மேற்கு ஐரோப்பாவிலிருந்து வரும் பார்வையாளர்களும் பின்வாங்கியுள்ளர்.

இந்த ஆண்டு பயணிகள் வருகைகள் குறைவதாலும், அமெரிக்கப் பொருட்களின் கொள்முதல் ரத்து செய்யப்பட்டதாலும் அமெரிக்கா 90 பில்லியன் டொலர் வரை வருவாயை இழக்க நேரிடும் என நிபுணர்கள் தரப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

## பெண்ணுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர்.

ஸ்கார்பரோ பகுதியைச் சேர்ந்த ஜெரெமையா ரஷீத் பூரன் (வயது 30) என்பவர், பெண் ஒருவரை தொடர்ந்து தொந்தரவு செய்து, கொலை அச்சுறுத்தல்கள் விடுத்துள்ளார் என நயாகரா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவங்கள் மார்ச்சுக்கும் ஏப்ரலுக்கும் இடையில் நடந்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், நயாகரா பிரதேசத்தின் எந்த பகுதியில் என்று தெளிவாக குறிப்பிடவில்லை.

மேற்படி நபருக்கு எதிராக தற்போது பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், அவர் கடந்த 2024 ஆம் ஆண்டிலும் நயாகரா பொலிஸாரினால் விசாரணைக்குள்ளானார் எனவும் இதேவிதமான குற்றச் செயல் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் தற்போது தலைமறைவாக உள்ளார் என பொலிஸார் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.





# கனடாவில் பணி அனுமதிகளை புலம்பெயர்ந்தோர் இழக்கின்றனர்

ஆவணப் புதுப்பித்தல் செயல்பாட்டில் நீண்ட தாமதங்கள் காரணமாக, இந்தியா, இலங்கையர்கள் உட்பட கனடாவில் வசிக்கும் ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்தோர் தங்கள் பணி அனுமதிகளை இழந்து வருகின்றனர்.

சட்டத்திற்கு உட்பட்டு வரி செலுத்தினாலும், கனடாவில் குடியேறுபவர்கள் தங்கள் சட்டப்பூர்வ அந்தஸ்தை இழந்தால் சட்டப்பூர்வமாக வேலை செய்யவோ அல்லது மருத்துவம் உள்ளிட்ட பிற சேவைகளை அணுகவோ முடியாது.

வீட்டுவசதி பற்றாக்குறை மற்றும் வாடகை உயர்வுக்கு மத்தியில் சேவைகள் மற்றும் வளங்களை சிரமப்படுத்துவதற்கு புலம்பெயர்ந்தோரை கனடா நீண்ட காலமாக குற்றம் சாட்டி வருகிறது.

அதுமட்டுமின்றி, புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையைக் குறைக்க கனடா முயற்சித்து வருவதாகவும், அதன் இலக்குகளை அடைய மக்கள் தானாக முன்வந்து வெளியேறுவதை நம்பியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்கா போல் அல்லாமல் கனடாவில் ஆவணங்கள் இல்லாமல் வாழ்வது ஓரளவு அரிதானது, ஏனெனில் அந்தஸ்து இல்லாமல் சேவைகளை அணுகுவது மிகவும் கடினம்.

மேலும், கனடாவில் நிரந்தர குடியிருப்பாளர்களாக மாற விரும்பும் தற்காலிக தொழிலாளர்களுக்கான தொழிலாளர் சந்தை தாக்க மதிப்பீட்டு செயலாக்க நேரம் குறைந்தது 2022 இலையுதிர்காலத்தில் இருந்து அதிகரித்து வருகிறது.

செப்டம்பர் 2023 இல் 58 வணிக நாள்களாக இருந்த இது மார்ச் 2025 இல் கிட்டத்தட்ட மூன்று மடங்காக அதிகரித்து 165 வணிக நாள்களாக அதிகரித்துள்ளது. இதுவரை ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக எத்தனை பேர் தங்கள் பணி அனுமதிகளை இழந்துள்ளனர் என்பது தொடர்பான தரவுகள் ஏதும் வெளியாகவில்லை.

கனடாவின் குடிவரவுத் துறை வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில், புலம்பெயர்ந்தோர் தங்கள் பணி அனுமதியைப் புதுப்பிக்க விண்ணப்பித்த 60 நாள்களுக்குள் தங்கள் நிலையைப் பராமரிக்கத் தேவையான தொழிலாளர் சந்தை தாக்க மதிப்பீட்டைப் பெறும் வரை தொடர்ந்து பணியாற்றலாம்.

ஆனால் நீண்ட காத்திருப்பு காரணமாக அந்தஸ்தை இழந்தவர்களுக்கான வழிகாட்டுதல்கள் எதுவும் குடிவரவுத் துறை குறிப்பிடவில்லை. விதிகளை மாற்றுவதும், அதிகமான விண்ணப்பதாரர்கள் வருவதும் அதிகரித்து வரும் தேக்க நிலைக்கு காரணமாக இருக்கலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

# பொலிஸாரை தாக்கிவிட்டு தப்பியோடிய பெண் கைது

பொலிஸாரை தாக்கி தப்பியோட முயற்சித்த பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஒஷாவா நகரத்தில் கைது முயற்சியின்போது ஒரு பெண் பொலிஸாரை தாக்கித் தப்பியோடியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

22 ஸ்டீவன்சன் சாலையில் உள்ள ஒரு வர்த்தக வளாகத்தில், வாகன மோசடி வழக்கில் சந்தேகநபராக இருந்த பெண்ணை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

அந்த 24 வயது பெண் பிணை விதிகளை மீறியுள்ளார் எனவும் கூறப்படுகிறது. அந்த பெண்ணை கைது செய்ய முயன்றபோது, அவர் , ஓர் அடையாளம் தெரியாத ஓட்டுநருடனும், வெள்ளை நிற மெர்சிடீஸ் வாகனத்தில் தப்பிச் சென்றனர்.



அந்த சாரதி வாகனத்தை பின்னோக்கி ஓட்டியதால், பொலிஸாரை பல மீற்றர்கள் இழுத்துச் சென்றதுடன், அருகில் நிறுத்தியிருந்த வாகனமொன்றுடன் மோதி விட்டு அந்த இடத்தை விட்டு தப்பியுள்ளார்.

இதனால், அதிகாரிக்கு சிறிய காயம் ஏற்பட்டுள்ளது. முதலில், சந்தேகநபர் 31 வயது பெண் என அடையாளம் காணப்பட்டிருந்தாலும், பின்னர் அவள் போலியான பெயரைப் பயன்படுத்தி நீதிமன்றத்தையும், விசாரணையாளர்களையும் ஏமாற்றியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

அவள் ஏப்ரல் மாதம் ஆரம்பத்தில் பீல் பிராந்தியத்தில் இன்னொரு வாகனத் திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்டபோது உண்மையான அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பெண் 24 வயதான அஸ்மா ஒஅத்ரியா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.